செய்யா விட்டால் பற்றாக்குறையாக இருக்கிற சேலம், தர்மபுரி மாவட்டம் என்று போய் பிறகு கொஞ்சம் தாண்டினால் கேரளம் என்று வந்து விடுகிறது அப்படிப் போகிற போது அதிகமாக விளைச்சலைத் தருகிற தஞ்சை மாவட்டமே வறட்சிக்கு உள்ளாக வேண்டிய ஒரு கட்டத்தை உண்டாக்கி விடுகிறார்கள். ஆகவே, அந்தந்த மாவட்டங்கள் வாடாமல் இருக்க வேண்டும். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயம் கிடைத்தது போக உபரி மற்ற மாவட்டங்களுக்குப் போகலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் மாவட்டமான வடாற்காடு மாவட்டத்தைக் கூட ஓரளவு உபரி மாவட்டமாக உள்ளதை வறட்சி மாவட்டமாக ஆக்கி விடுவார்கள் இடம் கொர்டுத்தால் ஆகவே கட்டுப்பாடு செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

அச்சிறுப்பாக்கத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

(159— *வினா எண். 17780)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் செயல்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : விற்பனைக் கூடம் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. விளைச்சல் பாதிக்கப் பட்டதால் வரத்துக்கள் இல்லை.

நிலக்கோட்டைத் தொகுதியில் உள்ள புறம்போக்கு நிலம்

(160— *வினா எண். 17861)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் நிலக்கோட்டை தொகுதியில் தண்ணீர் வசதியோடு கூடிய புறம்போக்கு நிலம் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அம்மாதிரியான இடங்களில் விவசாயப் பண்ணை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1984 மார்ச் 5]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் நாலைந்து இடங்கள், கணவாய்ப்பட்டி, ஆணைப்பட்டி போன்ற இடங்களில் புறம்போக்கு நிலங்கள் உள்ளன. அங்குள்ள மக்கள் விவசாயத்தை நம்பி இருப்பவர்கள் ஆவார்கள். அவர்கள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அங்கு சோளம், நெல், தென்னை, பழவகைகள் போன்றவற்றை உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு தக்க நடவடிக்கைகளை இனிமேலாவது அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பெரியகுளத்தில் ஏற்கனவே ஒரு தோட்டக்கலைப் பண்ணை இருக்கிறது. வத்தலக் குண்டு அருகில் அது இருக்கிறது. நிலக்கோட்டையிலிருந்து அங்கே போகலாம்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அரசாங்கத்தின் மூலம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. பண்ணை அருகிலேயே இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் பகுதியில் வாழ்கிற ஆதிதிராவிட பின் தங்கிய வகுப்பினர் வீணாக இருந்து கொண்டு, இருக்கிற புறம் போக்கு நிலங்களை தங்களுக்குக் கொடுத்தால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று சொல்கிறார்கள். உணவு உற்பத்தி செய்பவர்களுக்குக் கூட பட்டா கொடுக்காமல் இருக்கக்கூடிய அவல நிலை இருக்கிறது. பண்ணை வைக்கப்போகிறோம் என்று கூறி கொடுப்பது கிடையாது. ஆகவே அப்படி அப்ஜெக்ஷன் சொல்லாமல் கொடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தண்ணீர் வசதி உள்ள புறம்போக்கு நிலமே இல்லை என்று தான் மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் கடுகு எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

(161—* வினா 20536)—திரு. செ. செம்மலை திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடுகு எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முயற்சிகளை மேற் கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எங்கு ஆரம்பிக்கப்பட உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழுவதற்கு இடமேதுமில்லை.